


**29.09.2026**

தலைப்புச் செய்திகள்

1. உலகளாவிய 3-வது பெரிய விமானப் போக்குவரத்து சந்தையாக இந்தியா உருவெடுப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக சிவில் விமானப் போக்குவரத்து துறை அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.

2. பாரதிய ஜனதா கட்சியின் உயர்நிலைக் கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெற்றது.

3. ஆசிய விளையாட்டு மகளிர் துப்பாக்கி சுடுதல் டிராப் தனிநபர் பிரிவில் தங்கம் வென்ற இந்தியாவின் நீருவை குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு பாராட்டியுள்ளார்.

4. மேகதாது அணை விவகாரத்தில் தமிழக அரசு அனைத்து கட்சி கூட்டத்தை கூட்ட அஇஅதிமுக பொதுச் செயலாளர் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி வலியுறுத்தி உள்ளார்.

5. தமிழ்நாட்டில் சமூக நல்லிணக்கத்தை உறுதிசெய்யும் வகையில் அரசு தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக மாநில சமூக நீதித்துறை அமைச்சர் திரு. வன்னி அரசு கூறியுள்ளார்.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖❖

ராம்மோகன் நாயுடு

உலகளாவிய 3-வது பெரிய விமானப் போக்குவரத்து சந்தையாக இந்தியா உருவெடுப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய சிவில் விமானப் போக்குவரத்து துறை அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் 2027 ஆசிய வான்வழிப் பாதைகள் தொடர்பாக இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், 2047-ம் ஆண்டு வாக்கில் விமான பயணிகளின் எண்ணிக்கையை 130 கோடியாக உயர்த்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

2014-ம் ஆண்டு 74 ஆக இருந்த விமான நிலையங்களின் எண்ணிக்கை தற்போது 166-க்கும் அதிகமாக அதிகரித்துள்ளதாக குறிப்பிட்டார்.

உடான் திட்டம் அனைவருக்குமான விமான போக்குவரத்திற்கு வகை செய்ததாக அவர் கூறினார்.

ஆசிய வான்வழிப்பாதை 2027-ன், 23-வது நிகழ்வை இந்தியா ஏற்று நடத்தும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖❖❖

உலக இதய தினம்

ஆரோக்கியமான வாழ்க்கை முறையை பின்பற்றி, முன்கூட்டியே இதய நோய்களை கண்டறிந்து உரிய சிகிச்சைகளை மேற்கொள்ள மத்திய சுகாதார குடும்பநலத்துறை அமைச்சர் திரு. ஜே.பி. நட்டா வலியுறுத்தியுள்ளார்.

உலக இருதய தினம் இன்று கடைப்பிடிக்கப் படுவதை ஒட்டி அமைச்சர் வெளியிட்டுள்ள செய்தியில் இதய ஆரோக்கியத்தை பாதுகாப்பதன் அவசியத்தை எடுத்துரைத்தார்.

இதயத்துடிப்புகளை தவறவிடாதீர்கள் என்பதே இந்த ஆண்டின் கருப்பொருளாகும்.

இதுகுறித்து திருச்சி இதய நிபுணர் டாக்டர் சுரேஷ்குமார் பேசுகையில்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖

ஆடை வடிவமைப்பு

சீனாவின் ஷாங்காய் நகரில் அண்மையில் முடிவடைந்த 48-வது உலக திறன் போட்டிகளில் தேசிய ஆடை வடிவமைப்பு தொழில்நுட்ப கல்வி நிறுவனம் 2 வெள்ளி பதக்கங்களையும், அறிவுசார் திறன் விருதுகளையும் வென்றுள்ளது.

ஆடை வடிவமைப்பு, ஊடக கலந்துரையாடல், சில்லரை விற்பனை, காணொலி வர்த்தகம் உள்ளிட்ட 4 பிரிவுகளிலும் நிஃப்ட் மாணவ மாணவிகள் அறிவுசார் திறனில் விருதுகளை கைப்பற்றினர்.

உலகளவில் இந்தியாவின் ஆடை வடிவமைப்பு தொழில்நுட்பம் விரிவடைவதையும், படைப்பாற்றல் திறன் மின்னணு தொழில்நுட்ப திறன்களில் மேம்பட்டு திகழ்வதையும் இது புலப்படுத்துவதாக மத்திய ஜவுளி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கடந்த 23-ம் தேதிமுதல் 26-ம் தேதிவரை நடைபெற்ற இப்போட்டிகளில் 68 நாடுகளை சேர்ந்த ஆயிரத்து 400-க்கும் மேற்பட்ட இளம் போட்டியாளர்கள் 64 பிரிவுகளில் களமிறங்கினர்.

இந்தியா 6 வெள்ளி பதக்கங்கள், 20 திறன்சார் விருதுகளை வென்று 10-வது இடத்தை வென்று சாதனை படைத்தது.

❖❖❖❖❖❖❖❖❖

யுனெஸ்கோ

யுனெஸ்கோ உத்தேச பட்டியலில் இடம்பெற்றுள்ள இந்திய பாரம்பரிய சின்னங்களின் எண்ணிக்கை 78 ஆக அதிகரித்துள்ளது.

பண்டைய Bagh குகை ஓவியங்கள், Chambal பள்ளத்தாக்கு கோவில்கள், குப்த காலத்தின் உதயகிரி குகைகள், Ginnorgarh பழங்குடியினரின் பாரம்பரியம், சத்தியாகிரகம் நடந்த முக்கியப் பகுதிகள் உள்ளிட்டவை இதில் புதிதாக இணைக்கப்பட்டுள்ளன.

இதன்மூலம் நம்நாட்டின் சிறப்பான பாரம்பரிய பன்முக கலாச்சாரம் புலப்படுவதாக மத்திய சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் தமது சமூக வலைதளப்பதிவில் பெருமிதம் தெரிவித்துள்ளார்.

உலகளவில் நம்நாட்டின் பாரம்பரிய கலாச்சாரங்களை முன்னெடுத்து பாதுகாத்து பராமரிக்கும் பிரதமரின் தொலைநோக்கு பார்வையை இந்நிகழ்வு பிரதிபலிப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖

பி.ஜே.பி கூட்டம்

பி.ஜே.பியின் உயர்நிலைக்கூட்டம் கட்சியின் தேசியத் தலைவர் திரு. நிதின் நபின் தலைமையில் புதுதில்லியில் இன்று நடைபெற்றது.

கட்சியின் அமைப்பு சார்ந்த உரிமைகள் குறித்து இதில் ஆராயப்பட்டது.

உத்தரபிரதேசம் உள்ளிட்ட 6 மாநிலங்களுக்கு நடைபெறவுள்ள சட்டப்பேரவை தேர்தல்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய நிலைப்பாடுகள் குறித்தும் இதில் விவாதிக்கப்பட்டதாக தெரிகிறது.

இதனிடையே புதுதில்லியில் நடைபெற்ற காங்கிரஸ் கட்சியின் காரிய கமிட்டி கூட்டத்தில் உரயைாற்றிய காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே,

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளில் முறைகேடுகள் நடைபெற்றதாக கூறப்படும் பிரச்சனையில் தலைமை தேர்தல் ஆணையர் பதவி விலக வேண்டுமென்று கோரினார்.

வாக்காளர் பட்டியலில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் தொடர்பான அனைத்து தரவுகளும் வெளியிடப்பட வேண்டுமென்றும் அவர் வலியுறுத்தினார்.

❖❖❖❖❖❖❖❖❖

சேவா சங்கல்ப்

.. Music ..

பிரதமர் திரு.நரேந்திரமோடி 25 ஆண்டுகள் பொது வாழ்க்கையை நிறைவு செய்துள்ள நிலையில், வளர்ச்சி அடைந்த பாரதப் பாதை என்ற பிரதமரின் தொலைநோக்கு பயணத்தில், மக்கள் சேவை உறுதிமொழி இயக்கத்தின் ஒருபகுதியாக, வக்ஃப் சட்டம் 2025 தொடர்பான செய்தி தொகுப்பு இன்று இடம்பெறுகிறது.

பாரம்பரிய சொத்துக்கள் மீதான மகளிரின் உரிமையை உறுதி செய்யும் வகையிலும், வக்ஃப் வாரியத்தின் சொத்துக்களை முறையாக மேலாண்மைக்காகவும், வக்ஃப் சட்டத்தை மத்திய அரசு கொண்டுவந்தது.

வக்ஃப் சட்டத்திருத்த மசோதாவும், முசல்மான் வக்ஃப் ரத்து மசோதாவும் நாடாளுமன்றத்தில் நிறைவேறியது மிக முக்கிய நிகழ்வாகும் என்று பிரதமர் திரு. நரேந்திரமோடி கூறியுள்ளார்.

இஸ்லாமிய மகளிர் மற்றும் அச்சமூகத்தின் சிறுபான்மையினருக்கு எதிரான அநீதிகளை களையும் வகையில் தாவூதி போக்ரா சமுதாயத்துடன் கலந்துரையாடிய பின்னர் இந்த சட்டங்கள் கொண்டுவரப்பட்டதாகவும் பிரதமர் எடுத்துரைத்தார்.

வக்ஃப் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதன் மூலம் மகளிருக்கு சொத்துரிமை உறுதி செய்யப்பட்டதாக திருச்சியை சேர்ந்த டாக்டர் எம்.ஏ. அலீம் எமது செய்திப்பிரிவிடம் தெரிவிக்கையில்

❖❖❖❖❖❖❖❖❖

ஆசிய விளையாட்டு போட்டிகள்

ஆசிய விளையாட்டு போட்டிகளில் மகளிர் துப்பாக்கி சுடுதல் Trap தனிநபர் பிரிவில் இந்தியாவின் நீரு தங்கப்பதக்கத்தை வென்று புதிய சாதனை படைத்ததற்கு குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு பாராட்டு தெரிவித்துள்ளார்.

டிராப் தனிநபர் பிரிவில் இந்தியாவின் தேசிய கொடி உயரப் பறந்த நிகழ்வு நாட்டின் பெருமையான தருணம் என்றும் அவர் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளார்.

நீருவின் சாதனை இளைய தலைமுறையினருக்கு உத்வேகம் அளிக்கும் என்றும் கூறியுள்ளார்.

குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதா கிருஷ்ணன்,

மத்திய இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் உள்ளிட்டோரும் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

ஆசிய போட்டிகளில் இந்தியா 5-வது தங்கம் பெற்றுள்ள நிலையில் பதக்க பட்டியலில் 11-வது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖

எடப்பாடி கே. பழனிச்சாமி

மேகதாது அணை விவகாரத்தில் தமிழக அரசு அனைத்து கட்சி கூட்டத்தை கூட்டி மத்திய அரசிற்கும், கர்நாடகவிற்கும் உரிய அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி வலியுறுத்தியுள்ளார்.

மேகதாது அணை அமையவுள்ள இடத்தை மத்திய நிபுணர்குழு ஆய்வு செய்ய உள்ளதாக கர்நாடக முதலமைச்சர் திரு. சிவக்குமார் கூறியுள்ளதை சுட்டிக்காட்டியுள்ள அவர், இது தொடர்பாக தமிழக அரசு சார்பில் எந்த செய்தியும் வரவில்லை என்றும் குறை கூறியுள்ளார்.

கர்நாடக காங்கிரஸ் கட்சியுடன் இணைந்து தமிழக அரசு, விவசாயிகளை வஞ்சிப்பதாக அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖

வன்னி அரசு

தமிழ்நாட்டில் சமூக நல்லிணக்கத்தை உறுதி செய்யும் வகையில் அரசு தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக மாநில சமூக நீதித்துறை அமைச்சர் திரு. வன்னி அரசு கூறியுள்ளார்.

பொள்ளாச்சியில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், ஆணைமலையில் நடைபெற்ற தாக்குதல் தொடர்பாக காவல்துறையினர் தகவல் அறிந்தவுடன் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டதாக கூறினார்.

பாதிக்கப்பட்டவரின் குடும்பத்தினருக்கு அரசு சார்பில் 6 லட்ச ரூபாய் நிவாரணத்தொகை வழங்கப்பட்டதாக அவர் கூறினார்.

❖❖❖❖❖❖❖❖❖

விருதுநகர்

விருதுநகர் அருகே சத்திர ரெட்டியாப்பட்டி ஊராட்சியில் மத்திய புள்ளியில் அலுவலகம் சார்பில் தூய்மையே சேவை விழிப்புணர்வு நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

குப்பைகளை தரம்பிரித்து வழங்குவது குறித்து மத்திய புள்ளியியல் அலுவலகத்தின் உதவி இயக்குநர் திரு. ரத்தினம் எடுத்துரைத்தார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖

ஆதவ்அர்ஜுனா

கொங்கு மண்டலத்தில் தொழில்துறையினருக்கு புதிய வாய்ப்புகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்படும் என்று மாநில விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. ஆதவ்அர்ஜுனா தெரிவித்துள்ளார்.

கோவை விமான நிலையத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், த.வெ.க. ஆட்சியில் தொழில்துறையினர் சுதந்திரமாக செயல்படுவதாக கூறினார்.

❖❖❖❖❖❖❖❖❖

துரை வைகோ

பட்டினப்பாக்கத்தில் தலைமை செயலகம் அமைக்கும் விவகாரத்தில் முதலமைச்சர் மாற்று அறிவிப்பை வெளியிட வேண்டுமென்று மதிமுகவின் முதன்மை செயலாளர் திரு. துரை வைகோ கேட்டுக்கொண்டுள்ளார்.

கோவை விமான நிலையத்தில் இன்று பேசியஅவர், ஊடகங்கள் மற்றும் மக்களின் கருத்துக்களை அரசு திறந்த மனதுடன் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றார்.

டெல்லியில் 3-வது அணி உருவானால் அது ஆளும் பா.ஜ.க.விற்கு சாதகமாக அமையும் என்று கேள்வி ஒன்றிற்கு அவர் பதிலளித்தார்.

❖❖❖❖❖❖❖❖❖

வானிலை

வளிமண்டல காற்றழுத்த தாழ்வுப்பாதை காரணமாக மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், திருப்பத்தூர், வேலூர், ராணிப்பேட்டை, கிருஷ்ணகிரி, தர்மபுரி, கரூர், திருச்சி, அரியலூர், பெரம்பலூர், விழுப்புரம், கடலூர் மாவட்டங்களில் இடி மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

நீலகிரி, ஈரோடு, திருச்சி உள்ளிட்ட 13 மாவட்டங்களில் நாளை கனமழைக்கு வாய்ப்பிருப்பதாகவும் இம்மையம் கூறியுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖❖